செய்தி வெளியீடு எண்:881 நாள்:19.11.2020

பொது (தேர்தல்–1)த்துறை

## செய்தி வெளியீடு

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் புகைப்பட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 01.01.2021 தேதியினை தகுதியாக கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது

2. இப்பணிகளை கண்காணிக்கும் பொருட்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் 10 மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமனம் செய்துள்ளது. இவ்வாக்காளர் பட்டியல் பார்வையாளர்கள் சுருக்க முறை திருத்தப் பணிகளை, அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு குறைந்தது மூன்று முறையாவது பயணம் மேற்கொண்டு, மேற்பார்வையிட்டு, அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கூட்டங்களை நடத்துவதோடு, பொதுமக்களைச் சந்தித்தும் வாக்காளர் பட்டியல் சார்ந்த புகார்கள் குறித்தும் ஆய்வு செய்வர். அவர்களின் ஆய்வுக்குப் பின்னர், தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கையை அனுப்புவர்.

3. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்பேரில் வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களுடன் கலந்தாய்வு கூட்டத்தினை தலைமைத் தேர்தல் அதிகாரி இன்று (19.11.2020) நடத்தினார்.

4. வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களின் பெயர், பதவி மற்றும் விவரங்களுக்கு ஒதுக்கீடு செய்யபப்பட்ட மாவட்டங்கள் விவரம் பின்வருமாறு:–

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | டாக்டர் அதுல் ஆனந்த் , இ.ஆ.ப.,<br>ஆணையர், பொருளியல் மற்றும் புள்ளிஇயல் துறை | சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு |
| 2 | திரு. இரா. கிர்லோஷ் குமார், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை |

| | | |
|---|---|---|
| 3 | திருமதி.சிஜிதாமஸ் வைத்யன், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | மதுரை, தேனி, விருதுநகர் |
| 4 | திரு.ம.சு. சண்முகம், இ.ஆ.ப.,<br>ஆணையர், அருங்காட்சியகம் | நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் |
| 5 | திருமதி. பா.ஜோதி நிர்மலா சாமி, இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | கன்னியாகுமாரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி |
| 6 | முனைவர்.மா.வள்ளலார், இ.ஆ.ப.,<br>ஆணையர், பால் உற்பத்தி (ம) பால் பண்ணை மேம்பாட்டுத்துறை | தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை |
| 7 | திரு.சு.சிவசண்முகராஜா, இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு செய்தித்தாள் (ம) காகித நிறுவனம் | நாமக்கல், கரூர், திண்டுக்கல் |
| 8 | திரு.த.ஆபிரகாம், இ.ஆ.ப.,<br>சமூக நல ஆணையர் | ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை |
| 9 | முனைவர்.மு. கருணாகரன், இ.ஆ.ப.,<br>இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை | கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், ஈரோடு |
| 10 | திரு.சஜ்ஜன் சிங் ரா.சவன், இ.ஆ.ப.,<br>ஆணையர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை | அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கடலூர் |

**தலைமைத் தேர்தல் அதிகாரி**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**